# இந்து நாகரிகம்

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான துரிதமீட்டல் செயற்றிட்டம் 2020

பகுதி 2

திருமதி.வ.குலராஜா
ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்வி அலுவலகம்
வவுனியா தெற்கு.

# வேதம்

## அறிமுகம்

- இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதன்நூல்கள் எனவும் பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன.
- வேதம் ‘‘வித்’’ எனும் வினையடியிலிருந்து தோற்றம் பெற்று அறிவு எனும் பொருளினைத் தருகின்றது. இதனால் வேதம் அறிவு நூல் எனக்கொள்ளப்படுகின்றது.
- ‘‘வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைநூல்’’ என்ற வகையில் வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவையாகும்.
- வேதங்களைத் தொகுத்தவர்வேத வியாசர் ஆவார்.
- வரலாற்று அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு 1500 – கி.மு 600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறுப்படுகின்றது.
- வேதம் எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, மறை, அபௌர்ஷேயம், சுயம்பு, ஆம்நயம் முதலான பல பெயர்களைப் பெறுகின்றது.
- இந்துசமய இலக்கியங்கள் அனைத்தும் வேத இலக்கியங்களை ஆதாரமாக காட்டுகின்றன.

## 1. வேதங்களின் வகையும் அமைப்பும்

- வேதங்கள் நான்குவகையாகும். அவை சதுர்மறை, சதுர்வேதம் எனவும் அழைக்கப்பட்டன.
- ஆரம்பத்தில் வேதங்கள் திரயீவித்யா என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம், என்பனவாகும். பின்னர் அதர்வண வேதம் நான்காவதாக இணைக்கப்பட்டது.
- வேதங்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது இருக்கு வேதம். இருக்கு என்பது பாட்டு எனப்பொருள்படும். இவ்வேதம் பாட்டுக்களை மட்டுமே கொண்டிருப்பதனால் இருக்கு வேதம் எனப்பெயர் பெற்றது.
- இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது. இவற்றுள் இரண்டாம் மண்டலம் முதல் ஏழாம் மண்டலம் வரை மிகப்பழைய பாடல்கள் இருக்கின்றன. இவற்றை இயற்றியோர் கிருத்ஸமதர், விசுவாமித்திரர், வாமதேவர், அத்திதி, பரத்துவாசர், வசிட்டர் ஆகியோர் ஆவர்.
- யசுர் வேதம் செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்டிருந்தது. இம்மந்திரங்களை ஓதுபவர்கள் அத்வாயுக்கள் என அழைக்கப்பட்டனர்.
- யசுர் வேதம் 108 சாகைகளைக் கொண்டது. இது கிருஸ்ண யசுர், சுக்கில யசுர் என இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது.
- சாமம் என்பது இசைப்பாடல்களைக் கொண்டிருந்தது. 1875 பாடல்களைக் கொண்ட சாமவேதம் பூர்வஆர்ச்சிகம், உத்தராச்சிகம் எனும் இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது.

பூர்வ ஆர்ச்சிகம் என்பது பாட்டுக்களின் முதல் தொகுதி எனவும் உத்தராச்சிகம் என்பது பாட்டுக்களின் பின்தொகுதி எனவும் பொருள்படும்.

- அதர்வவேதம் 20 காண்டங்களையும் 731 சூக்தங்களையும் 6000 பாடல்களையும் கொண்டது. இதற்கு அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ், பிரம்ம வேதம் என்ற பெயர்களும் உண்டு.
- நால் வேதங்களும் 4 பகுதிகளையும் 3 காண்டங்களையும் கொண்டது. சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள்

சங்கிதை – மந்திரங்களின் தொகுப்பு

பிராமணம் - வேள்விகளிற்குரிய விதிகளை எடுத்துரைப்பது

ஆரணியம் - வானப்பிரஸ்தத்திற்குரிய அனுட்டானங்களை எடுத்துரைப்பது

உபநிடதம் - உண்மைப் பொருள் பற்றிய விசாரணைகளை எடுத்துரைப்பது.

- சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்ட பகுதியை சார்ந்தவை.
- ஆரணியம் உபாசணை காண்டத்தை சார்ந்தது.
- உபநிடதம் ஞான காண்டத்தை சார்ந்தது.

## 2. வேதங்களில் தெய்வங்களும் வழிபாடுகளும்

- வேதகால மக்களிடையே இயற்கை வழிபாடு முக்கிய இடம் பெற்றது. வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும்,

  விண்ணுலக தெய்வங்கள்

  இடையுலக தெய்வங்கள்

  மண்ணுலக தெய்வங்கள் என வகைப்படுத்துவர்.

- பின்னர் “ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி” என்ற ஒரு கடவுள் கோட்பாடாக பரிணாமம் அடைந்தது.
- தெய்வங்கள் வழிபடுவோருக்கு நன்மை கொடுத்தனவாகவும் பகைவர்களை அழிப்பனவாகவும் வேதங்கள் குறிப்பிடுகின்றன.
- வேதகால மக்கள் தெய்வங்களுக்கு செய்த வழிபாடுகள் கிரியைகள் பற்றி வேதங்களில் கூறப்பட்டுள்ளன.
- வேள்விகளின் பிரதான நோக்கம் இம்மைப்பயன்களே ஆகும். நீண்ட ஆயுள், போரில் வெற்றி, நோய் நீக்குதல் முதலான உலகியல் தேவைகளை அவாவி வேள்விகள் செய்யப்பட்டன.

- அஸ்வமேதம், இராஜசூயம், புருஷமேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்தி வேதங்களில் காணப்படுகின்றன.
- வேள்வியின் போது யாக குண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானம் வழங்குதல், தட்சணை வழங்குதல், துதி பாடுதல் முதலான கிரியைகள் இடம்பெற்றன.
- சவித்திரு என்னும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திரம் விபூதி தானம் பற்றியும் வேதங்களில் கூறுகின்றது.
- இருக்கு வேதம் இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக என இசையால் இறைவனை வழிபடுதல் பற்றி கூறுகின்றது.
- சுக்கில யசுர்வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுகின்றது. உதாரணம் ''சதருத்திரியம்''
- சாமவேதம் இறைவழிபாட்டிற்குரிய இசைப்பாடல்களைக் கொண்டிருந்தது.
- அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரிக நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.
- பௌஷ்டிகானி – உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச்செழிப்பு போன்ற நன்மையளிக்கும் தன்மையுடையது.
- பேஷஜானி – நீண்ட ஆயுள்
- ஸ்திரிகர்மானி – பெண்களின் சுபீட்சம் பற்றியும் நன்மை, தீமை கருதியும் செய்யப்படுபவை.
- ராஜகர்மானி – அரசர்களின் நன்மை கருதிச் செய்யப்படுபவை.

## 3. **தத்துவ சிந்தனைகள்**

- வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளைக் கொண்டுள்ளன.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், யமசூக்தம், வருணசூக்தம் போன்ற பகுதிகளில் கூறப்படுகிறது.
- ரிக்வேதம் 1:164:46 ஆவது பாடலில் '' ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி'' எனும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது.
- இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீய பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பாபன சிந்தனைகளையும் காணலாம்.

- யமசூக்தம் இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்கு பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்களும் உள்ளன.
- பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்ச படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்கள் நாஸதீய சூக்தத்தில் காணமுடியும்.
- வருணன் ˙பற்றிய பாடல்களில் வரும் வர்ணசூக்தம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.
- வருணன் 'ரிதசயகோபா' என அழைக்கப்படுகிறான்.

## 4. தனிமனித வாழ்வும் சமூகநிலையும்

- வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விபரிக்கின்றன.
- தனிமனித வாழ்க்கைப்படிநிலைகளாக பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் தொடர்பான சிந்தனைகளை வேதங்கள் கொண்டுள்ளன.
- இருக்கு வேத பிரமச்சரியசூக்தம், முனிசூக்தம், திருமணம் பற்றிய பாடல்களில் வாழ்க்கைப்படிநிலை பற்றி கூறப்படுகின்றன.
- ''தம்பதி எனும் சொல் இருக்கு வேதத்தில் கணவன் மனைவியை சுட்டுகின்றது.
- குடும்பத்தலைவன் வேள்விச்சடங்கு ஆற்றல்
- இருக்கு வேத புருஷசூக்தப் பாடல்களில் வர்ணக்கட்டமைப்பு பற்றிக் கூறப்படுகின்றது.
- வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்பன பிராமணர்களின் முக்கிய கடமையாகக் கூறப்படுகின்றது.
- சத்திரியர் முக்கிய இடம் வகித்தனர்.
- வேதகால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர்.
- மக்களின் நலன் பேணும் வகையில் அரசாட்சி இடம் பெற்றது.
- அரசரின் மகுடாபிஷேகத்தின் போது ''மன்னராகிய நீர் இன்று முதல் வலியோரையும், மெலியோரையும் சமமாக நடத்துவீராக என புரோகிதன் வேண்டிக் கொண்டார்.

சபா, சமிதி முதலிய நிறுவனங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன

# புராணம்

## 1. புராணம் என்பதன் பொருள் விளக்கம்.

- ✓ புராணம் என்பது பழமை வாய்ந்தது என்னும் கருத்துக்களைத் தரும்.
- ✓ “பூரணாத் புராணம் அதி உச்சயதே” முழுமையானதால் புராணம் என்னும் கருத்தும் உண்டு.
- ✓ தோற்றம் - பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது

  வைதீக ஒழுகலாறுகளைப் பேணும்வகையில் தோற்றம் பெற்றன.

  தெய்வீக வரலாற்றை பரப்பும் நோக்கில் இடம் பெறுதல்.

- ✓ காலம் - குப்தர் காலம்.
- ✓ புராணங்களின் அமைப்பு
- ✓ வடமொழிப்புராணங்கள் 18. அவை மகா புராணங்கள் என்று அழைக்கப்படும். அவை சமஸ்கிருத மொழியில் உள்ளன. பல லட்சம் சுலோகங்களைக் கொண்டமைந்தவை.
- ✓ புராணங்களின் பகுப்பு முறைகள்

  சிவபுராணம் 10

  விஷ்ணு புராணம் 4

  அக்கினி புராணம் 1

  சூரிய புராணம் 1

  பிரமபுராணம் 2

- ✓ பஞ்ச லட்சணங்கள் - சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், வம்சாநுசரிதம், மனுவந்தரம்
- ✓ தச லட்சணங்கள் மேற்கூறிய பஞ்ச இலட்சணங்களுடன் முக்தி, கேது, ரக்ஷா, அபாரக்ஷய, விருத்தி என்பனவும் அடங்கும்.
- ✓ தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
- ✓ சைவ வைணவ நெறிகள் பற்றிக்கூறுவது
- ✓ திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை எடுத்துரைப்பது
- ✓ விரதம், தீர்த்தம், தலம், தலயாத்திரை, தோத்திரம் பற்றிக் கூறுவது.
- ✓ தெய்வீக பரத்துவத்தை விளக்குவது. (அட்ட வீரட்ட கதைகள், சிவபரத்துவம் - அடிமுடி தேடிய கதை, விஷ்ணு பரத்துவம் - பாகவத புராணம் அவதாரம், சக்தி பரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தது, பக்தி மரபுகள் - மார்க்கண்டேயர் பிரகலாதன் கதைகள் )

✓ கலை, அரசியல் மரபுகள் கொண்டமைபவை – விஷ்ணுதர்மோத்திரத்தின் உரையாடல்கள் கலை மரபு வளர்ச்சிக்கு ஆதாரமானவை.

## 2. புராண இலக்கியங்கள் பிற்கால சமயமரபுகளில் செலுத்திய செல்வாக்கு

- தலபுராணங்களும் தமிழ்மொழி புராணங்களும் தோன்றக் காரணமாக வடமொழி புராணங்கள் அமைந்தன.
- மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகக் காரணமானவை. புராணபடன மரபுகள், கந்தபுராண கலாசாரம் தோன்ற இடமளித்தவை.
- பிற்கால வடமொழி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை.
- திருமுறைகளிலும், ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக் கதைகள் செல்வாக்கு பெற்றமை.
- சிற்ப, ஓவிய, நடனக்கலைகளுக்கு கருவாக அமைந்தவை.

## 3) இந்து சமயத்தில் புராணங்கள்

- இந்துசமயத்தின் மரபுகளை எடுத்துக் கூறும் கருவூலங்களாகப் புராணங்கள் முக்கித்துவம் பெறுகின்றன. வடமொழி மகாபுராணங்கள் பதினெட்டு. அவை சமஸ்கிருத மொழியில் உள்ளன. பல இலட்சம் சுலோகங்களைக் கொண்டன. அவ்வவ் தெய்வங்களைப் போற்றும் வகையில் சிவ, விஷ்ணு, அக்கினி, சூரிய மற்றும் பிரம்ம புராணங்கள் என சிறப்பு பெறுகின்றன.
- பஞ்ச இலட்சணங்கள் :- சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம் முதலியனவாகும். தசலட்சணங்களும் உள்ளன.
- சைவ வைணவ சமய நெறிகளை அறியப் புராணங்களின் அறிவு அவசியமாகும்.
- மூர்த்தி, தல, தீர்த்தம், விரதம், தவம், தலயாத்திரை, தோத்திர மரபு, தெய்வீக வரலாறு, தெய்வங்களின் திருவுருவச் சிறப்பு ஆகியவற்றைப் புராணங்கள் கூறுகின்றன.
- திருமாலின் அவதாரங்கள், சிவனது பரத்துவம், புவியியல், நதிகள் என்பன பற்றியும் வானவியல் பற்றியும் கூறுவன.
- பக்தி மரபு சிறக்க புராணங்கள் பெரிதும் உதவியுள்ளன.ய
- திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் சிறப்பு பெற்றன.
- திருக் கோயிற் பண்பாடு வளம்பெற உதவியுள்ளன.
- தலபுராணங்கள், தமிழ்ப் புராணங்கள், மகாத்மியங்கள் உருவாக முன்னோடியாக அமைந்தன.
- திருக்கோயிலில் புராணபடன மரபு சிறப்படைந்து இந்துசமய மரபு வளம் பெற்றது.
- அறநெறி, ஒழுக்க நெறி, கடவுள் வழிபாடு சிறக்கக்கூடிய சமய கருத்துக்களை எடுத்துக் கூறி சமய மரபை வளம்படுத்துகின்றது.

## 4) புராணங்களின் முக்கியத்துவம்

இந்துசமயம் பற்றிய நூல்கள் என்ற வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக?

- புராணங்கள் தோன்றிய காலம் கி.மு 1000 – 600 வரையில்
- புராணங்கள் ஆரம்பத்தில் பௌராணிகர் கையாளும் இலக்கியமாக இருந்துள்ளன.
- சைவம், வைணவம் ஆகிய சமய நெறிகளின் எல்லா அம்சங்களையும் விளக்கும் பெருநூல்கள்.
- இக்கால வழிபாட்டு நெறி முழுமுதல் கடவுள் வழிபாட்டை முன்னிலைப்படுத்தியது. ஆலய வழிபாடும் உருவ வழிபாடும் அதன் பிரதான அம்சங்களாயின.
- பக்தி நெறிக்கு சிறப்பிடம் கொடுத்தது.
- ஆலயங்களில் உள்ள சிற்பங்களின் தோற்றப் பொலிவுகள் புராணக் கதையுடன் தொடர்பானவை.
- தலயாத்திரை, புனித சேத்திரங்கள் என்பன முனைப்பு பெற்றன.
- கடவுள் வழிபாட்டு நெறி, சமயாசாரங்கள், ஒழுக்க நெறி, துறவு, சந்நியாசம், மோட்சம் என்பன பற்றிய கருத்துக்கள் அடங்கியுள்ளன.
- காலம், பரவொளி, அவற்றைக் கடந்த கடவுளின் பரத்துவ நிலை என்பன பற்றிய கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.
- அவதாரங்கள், முனிவர்கள் புவியியல் கண்டங்கள், தேசங்கள், நதிகள் என்பன பற்றி எல்லாம் சொல்லப்படுகின்றன.
- தலபுராணங்கள் தோன்றுவதற்கு அடிப்படையானவை.
- பாரத தேசத்தில் பல மொழிகளில் இருந்து வெளியிடப்படும் சமய இலக்கியங்களும் புராணங்கயையே கருவூலமாக கொள்கின்றன..

.

# பல்லவர் காலம்

## 1. பல்லவர்கால அரசர்களும் சைவமரபும்

- பல்லவர்கால பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவர் சிம்மவிஷ்ணு ஆவார். எனினும் மகேந்திரவர்மன் காலத்தில் இந்துமத மறுமலர்ச்சியும், சமயநிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட்டன.
- பல்வர்களின் சமய சின்னமான நந்தி சின்னமும், சிவனின் கட்டுமானக் கொடியும் அவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. கூரம் காசாக்குடி பட்டயத்தில் நந்திக்கு மேல் இலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
- மகேந்திரவர்மன் கோயில் கட்டுமானப் பணியில் மாற்றத்தை ஏற்படுத்தினான். மண், மரம் தவிர்ந்து புதிய கற்கோவில்களைக் கட்டுவித்தான். (குணபர ஈச்சரம்) சாளுக்கிய படையெடுப்பை முறியடித்து சைவசமயத்தை பாதுகாத்தான்.
- சீயமங்களம், வல்லம் முதலிய இடங்களில் குடபோக ஆலயங்களை அமைத்தான்.
- விசித்திரசித்தன், வியத்தகுதிறத்தோன், சங்கீர்னஜாதி, குணபரன், மத்தவிலாசன், ஷேத்தகாரி, சித்திரகாரபுலி, என்னும் விருதுப் பெயர்களும் மகேந்திரவர்மனுக்கு வழங்கப்பட்டன.
- திருச்சிறாப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு மகேந்திரவர்மனது சிவபக்தியை எடுத்து காட்டுகிறது.
- முதலாம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்றம் சிவன் கோவிலுக்கு தானம் செய்ததாக சாசனம் குறிப்பிடுகிறது.
- மூன்றாம் சிம்மவர்மன், ஐயடிகள் காடவர்கோன் என்ற புகழ்பெற்ற அடியார் ஆவார். இவர் 24 சிவத்தலங்கள் பற்றி ஷேத்திர வெண்பா பாடியுள்ளார்.
- மாமல்லன் இரதக்கோயில்களை அமைத்து திறந்த வெளியில் சிற்ப கூடங்களை அமைத்தான்.
- மாமல்லபுர கலைக்கூடத்தையும், வராகமண்டபம், பாண்டவர் கோயில்களையும் அமைத்தான். அர்ச்சுனன் இரதம், திரௌபதி இரதம், வீமசேனரதம், சகாதேவன் இரதம், என்பன இரதக் கோயில்களாகும்.
- பரமேஸ்வரவர்மன் வித்தியாவிநீதன் என்னும் விருதுப் பெயர் கொண்ட இவன் கூரம் என்ற இடத்தில் சிவன் கோவில் ஒன்றை அமைத்தான். அக்கோயில் பூசைக்கென 108 சதுர்வேதிகளுக்கு நிலம் அளித்ததாக கூறப்படுகின்றது.
- மாமல்லபுர கணேசர் கோவில் கல்வெட்டு பரமேஸ்வரனின் ஆழ்ந்த சிவ பக்தியினை எடுத்துக்காட்டுகின்றது.
- இராஜசிம்மன் இவர்காலத்தில் சைவநெறி சிறப்பாக வளர்ச்சிகண்டது. மகாபலிபுரத்திலும், காஞ்சிபுரத்திலும் சைவ, வைஸ்ணவ ஆலயங்களை அமைத்தான். இவன் அமைத்த

காஞ்சி கைலாச நாதர் கோவில் (பெரிய கற்றளி) சிறப்பிடம் பெற்றது. இவன் காலத்தில் சதுர்வேதி மங்கலங்களும், கிருஷ்ண மங்கலங்களும் அதிகரித்தன. கலியுகத்தில் அசரீரி கேட்டவன் என சாசனங்கள் குறிப்பிடுகின்றன. சிவசூடாமணி, சங்கரபக்தன், ஆகமபிரியன், சைவ சித்தாந்த மார்க்கன் போன்ற விருதுப் பெயர்களைக் கொண்டவன்.

## 2. பல்வர்கால சைவசமய பக்தி இலக்கியங்கள்

- புறச்சமய கண்டனம், சைவசமய மீட்டுருவாக்கம், இறைவனை அன்பு வழியில் வழிபடல், தோத்திர பாடல்கள் தோன்றுதல், பதிகம் பாடல், இசையுடன் பாடல், கலைஞர்களை இணைத்தல், சைவப் பெண்களை பக்தி இயக்கத்தில் இணைத்தல், மன்னர்களை சைவசமயத்தில் சேர்த்தல், சிவசின்னங்களைப் பேணுதல், பஞ்சாட்சர மந்திரம் ஓதல் போன்றவற்றை சைவ பக்தி இயக்கத்தினர் கடைப்பிடித்தனர். ஆலயத் தொண்டுகளைச் செய்தனர். ஊர் ஊராகச் சென்று புராணக் கதைகளைக் கூறி வழிபாடு செய்தனர்.

  "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதினார்……………"

  "பூவார் மலர் கொண்டு அடியார் தொழுதனார்………….."

  "என் கடன் பணி செய்து கிடப்பதே ……………………."

  அன்பு நெறி வழிபாட்டில் இறையருள் மூலம் அற்புதங்கள் பல விழைந்தன. பொது மக்களின் துன்பங்கள் விலகின. சிவனடியார் பக்தி இயக்கத்தில் கலந்து செயற்பட்டனர். பொது மக்கள் நாயன்மார்களுடன் சேர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றால் சைவசமயமே மெய்ச்சமயம் என வலியுறுத்தப்பட்டது. பக்தி நெறியால் இறைசிந்தனை ஊட்டும் இனிமையான பதிகங்கள் தோற்றம் பெற்றன. நாயன்மார்கள் பல்வேறுமார்க்கங்களில் சிவனைப் போற்றினர். அவை தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவாகும்.

## 3. ஆழ்வார்களும் வைணவ திருப்பணிகளும்

- திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள். திருமாள் மீது தமிழில் தோத்திரப்பாடல்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த்தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம விளக்கேற்றி வழிபாடு செய்தார்கள் ஆழ்வார்கள். கடவுள் மீது இடையறாத ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள் தோத்திரப் பாடல்களைப் பஜனையாக பாடும் மரபையும் கொண்டவர்கள். வைணவ பிரபந்தத்திற்கு புராண இதிகாச கதைகளை ஆதாரமாகக் கொண்டனர். பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, திருமடல், திருப்பாவை முதலிய பிரபந்த வகைகளைப் பாடினர். பல்வேறு பாவங்களில் விஷ்ணுவைப் போற்றினர். (தாஸ்ய, மதுர, வாத்சல்ய, சகிய முதலான பாவங்கள்) மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளம் இட்டனர்.

# நவீன சீர்திருத்த இயக்கங்கள்

1. **நவீன சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றமைக்கான காலச்சூழல்**

   18ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் சமய சமூக பின்னடைவுகள் ஏற்பட்ட வேளையில் இந்துசமய குறைபாடுகளை களையும் முகமாக தோன்றிய நிறுவனங்களே நவீன கால சமூக சீர்திருத்த நிறுவனங்கள் ஆகும்.

   சமூகக்குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின.

   இந்து சமூகத்தில் உள்ள மூட பழக்கவழக்கங்கள் அறியாமை என்பவற்றை நீக்கி அறிவை வளர்த்து ஆன்மீக வளர்ச்சிக்குரிய வழிகளை அறியச் செய்தல்.

   சமத்துவம் பேணல், சமூகமேம்பாடு, சமய பெருமை, ஆன்மீக பெருமை, சமய சமரச நெறி, இந்துக்கல்வி விருத்தி என்பவற்றை ஏற்படுத்தின.

   ஐரோப்பியரின் வருகை காரணமாக இந்து சமய சமூகத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளை களையும் முகமாக தோற்றிவிக்கப்பட்டது.

2. ‘‘மனிதகுலமேம்பாட்டிற்கு உழைப்பதில் பிரமசமாஜத்தின் பணி மகத்துவமானது.’’
   மேல்வரும்தலைப்புகளின் கீழ் இக்கூற்றை ஆராய்க?

   அ. பணிகள்

   ஆ. சமூகமேம்பாடு

   இ. இராஜாராம் மோகன்ராஜ்

**அ. பணிகள்**

- 1828ல் பிரம சமாஜத்தை அமைத்தமை
- இந்து சமயத்தின் மூல நூலாகிய வேதத்தை ஏற்றுக்கொண்டமை
- உருவ வழிபாட்டை ஏற்காமை, 1804ல் உருவவழிபாட்டை எதிர்த்து துண்டுபிரசுரம் வெளியிட்டமை
- ‘‘விக்கிரக ஆராதனை’’ என்றவகையில் உருவ வழிபாட்டை எதிர்த்துக்கூறியமை
- மேலைத்தேய கல்வி மாயையில் ஒளி பெற வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டமை.
- ஆங்கிலக் கல்விக் கல்லூரிகள், சமஸ்கிருத கல்விக்கல்லூரிகள் நிறுவியமை.
- பால்ய விவாகத்தடை,
- மதமாற்றத்தினைத் தடுத்தமை.
- விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவு.
- சிசுக்கொலைத் தடை.
- பலதார மணத்திற்கு எதிர்ப்பு.
- பெண்கல்வி ஆதரவு.

- பெண் சொத்துரிமை. பிராமணியர் கொள்கையை சீர்திருத்தம் செய்து பிரமசூத்திர உரை செய்து ஒரு கடவுட் கோட்பாட்டை பரப்பியவர்.
- சமூகக் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து தர்மத்தைப் பாதுகாத்தல்.
- மரபுவழி இந்து நெறியைப் பேணியமை.
- ஆன்மீக வளர்ச்சிக்கும், அறிவியல் சிந்தனைக்கும் பாலமாக திகழ்ந்தார்.
- உடன்கட்டை ஏறும் மரபை 1829 இல் சதி என்னும் சட்டமூலம் தடை செய்தார்.
- 1815 இல் ஆத்மீக சபை அமைத்து வேதாந்த கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.
- சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டிற்கு உரிய வழி என்பதை போதனையாளும், சமாஜத்தின் சாதனையாளும் நெறிப்படுத்தியமை. "அவர் ஒருவரே உண்மை எல்லோரும் வாருங்கள்" என்று சமய ஒருமைப்பாட்டையும் சமூக ஒருமைப் பாட்டையும் பேணியமை.
- 1816 இல் வேதாந்த சூத்திரத்தை மொழி பெயர்த்தமை.
- 1820 இல் மரபுவழி நம்பிக்கைகளை பகுத்தறிவு ரீதியாக விமர்சித்தமை.
- பிராமணரையும் இஸ்லாமியரையும், கிறிஸ்தவரையும் வழிபாட்டில் ஈடுபடுத்தி வர்ணதர்மம் கடந்த வாழ்வினையும் சமரசத்தையும் ஏற்படுத்தியமை.
- இந்து தர்மத்தை இங்கிலாந்து நாடு வரை பரப்பிய பெருமை இச்சமாஜத்தையே சாரும்.

## ஆ. சமூகமேம்பாடு

- கல்வியில் நாட்டம் ஏற்பட்டமை.
- சமய, சமூக விழிப்புணர்வு ஏற்பட்டமை.
- மதமாற்றம் தடுக்கப்பட்டமை.
- அறிவியல் சிந்தனை வளர்ந்தமை.
- மூலநூல்களைக் கற்றல் மூலம் மூடக் கொள்கையிலிருந்து நீங்கி அறிவைப் பெற்றமை.
- வர்ண தர்மம் கடந்த வாழ்வியலைப் பின்பற்றியமை.
- உடன் கட்டை ஏறுதல் தடை செய்யப்பட்டமை.
- பெண்களுக்கு மறுவாழ்வு கிடைத்தமை.
- பெண்ணுரிமையைப் பாதுகாத்தமை.
- சிசுக் கொலையை தடுத்தமை.
- பால்ய திருமணம் தடுக்கப்பட்டது.
- சாதிபாகுபாடு தடுக்கப்பட்டமை.
- விதவை மறுமணம் அங்கிகாரம் பெற்றமை.

- பெண்களுக்கு முக்கியத்துவம் ''தத்துவபோதினி'' என்ற நூலில் வெளிப்படுத்தியமை.
- மேலைத் தேய கல்வி மரபில் ஒளி பெறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியமை.
- விக்கிரக ஆராதனை என்ற நூலில் உருவவழிபாட்டை மறுத்து கூறியமை.

## இ. இராஜாராம் மோகன்ராஜ்

- ❖ இவர் 1774ல் வங்காள நாட்டில் பிறந்தார்.
- ❖ தந்தை - இராமகாந்தர். தாய் - தாரணிதேவி.
- ❖ பல்மதக் கோட்பாடுகளை அறியச்செய்தவர்.
- ❖ பன்மொழிப் புலமைக் கொண்ட பிராமணக் குலத்தவர்.
- ❖ பிராமணியக் கொள்கையை சீர்திருத்தம் செய்ய முயன்று பிரம சூத்திர உரை செய்து ஒரு கடவுட் கோட்பாடுகளை பரப்பியவர்.
- ❖ சமூக குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தை பாதுகாப்புச் செய்வதில் பங்களிப்புச் செய்தவர்
- ❖ பல சமய ஆய்வாளர்.
- ❖ பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி ஆயினும் மரபுவழி இந்து நெறியை பேணியவர்.
- ❖ ஆன்மீக வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.
- ❖ தனது சகோதரி உடன்கட்டை ஏறியதைக் கண்டு அதனை சதி என்னும் தடைச் சட்டத்தின் மூலம் தடுத்தவர்.
- ❖ 1815ல் ஆத்மீக சபை அமைத்து வேதாந்தக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- ❖ சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டிற்குரிய வழி என்பதை போதனையிலும் தனது சமயத்தின் சாதனையிலும் காட்டியவர்.
- ❖ ''அவர் ஒருவரே உண்மை எல்லோரும் வாருங்கள்'' என்று சமய , சமூக ஒருமை வாதத்தை போற்றியவர்.
- ❖ 1816 – வேதாந்த சூத்திரத்தை மொழி பெயர்த்தல்.
- ❖ 1817 – வேதாந்தக் கல்வியை பரப்பியவர்.
- ❖ 1820 – மரபுவழி நம்பிக்கைகளை பகுத்தறிவு ரீதியில் விமர்சித்தவர்.
- ❖ 1828 – பிராமணன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டார்.
- ❖ 1825 – பல்வகை பிரார்த்தனை வழிபாட்டை ஏற்படுத்தியவர்.
- ❖ 1828 – பிரம சமாஜத்தை நிறுவியமை.
- ❖ இந்துப் பண்பாடு உபநிடத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது என்பது இவரது சிந்தனையிலாகும்.
- ❖ பெண்ணுரிமையை பாதுகாத்து இந்து தர்மத்தை இங்கிலாந்து நாடுகளுக்கு பரப்பிய பெருமை இவருக்குரியது.
- ❖ பெண் கல்வி தொடர்பான கட்டுரை 'தத்துவ போதினி' என்ற நூலில் வெளியிட்டமை.

❖ விக்கிரம ஆராதனை என்ற நூலில் உருவ வழிபாட்டை எதிர்த்துக் கூறியமை.
❖ ஆங்கிலக் கல்லூரி சமஸ்கிருத கல்லூரி நிறுவியமை.
❖ துண்டுப்பிரசுரம், பத்திரிகை, நூல்கள் என்பவற்றை வெளியிட்டார்.
❖ இவரது பிரமசமாஜத்தை பிராமணரும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும், வழிபாட்டில் ஈடுபட்டனர். இது வர்ண தர்மம் கடந்த வாழ்வியலை காட்டுகின்றது.

## ஈழத்து இந்துமத வரலாறு

### 1) இலங்கையில் பொலநறுவைக் காலத்தில் (கி.பி 1000 – 1250) ஏற்பட்ட இந்துசமய கலாசார வளர்ச்சியின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க?

- தமிழகத்துடன் கொண்ட தொடர்பு காரணமாக பொலநறுவையிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்துசமய கலாசார வளர்ச்சி ஏற்படலாயிற்று.
- இலக்கிய ஆதாரங்கள், கட்டடங்கள், சிற்பங்கள் கல்வெட்டுக்கள், புதைபொருட் சின்னங்கள் போன்றவற்றின் ஊடாக பொலநறுவைக் காலத்து இந்துப்பண்பாட்டு வளர்ச்சியைக் காணலாம்.
- பொலநறுவைக் காலத்தில் பொலநறுவை நகரம் இராசதானியாக விளங்கியது.
- இக்காலம் இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் உன்னதமான காலம்.
- பொலநறுவை, கந்தளாய், மண்டலகிரி, விக்கிரமசாளமேகபுரம், மாதோட்டம், திருக்கோணேஸ்வரம், பதவியா ஆகிய இடங்களில் இந்துசமய கலாசார மரபுகள் வளர்ச்சியடைந்தன.
- இப்பிரதேசங்களில் பல இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டன.
- சோழர் ஆட்சியல் பொலநறுவைக் காலத்தில் பௌத்த மன்னர்களும் சைவ ஆலயங்களை அமைத்து வழிபட்டனர்.
- அரசர்கள் மட்டுமன்றி பிரதானிகளும் வணிக கணங்களும் கோயில் பணிகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
- இக்காலத்தில் நாணாதேசிகர் என்னும் ஐநூற்றுவர் என்ற வணிக கணம் மிகுந்த சிறப்பு பெற்றிருந்தமையால் நாட்டின் பல பாகங்களிலும் ஆலயங்கள் அமைத்தனர்.
- கோயில்களுக்கு தேவையான சீனபட்டு, கற்பூரம், சந்தனம் ஆகியவற்றை இவர்களே இறக்குமதி செய்து விநியோகித்தனர்.
- பொலநறுவையில் 14 இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் பொலநறுவை வானவன் மாதேவி ஈஸ்வரம் (இரண்டாம் சிவாலயம்), ஐந்தாம், ஆறாம் சிவாலயங்களும் சோழர் காலத்தை சேர்ந்தவை.

- தமிழகத்தில் சோழர் ஆட்சியில் ஏற்பட்ட இந்துப்பண்பாட்டு வளர்ச்சியினை இவை பிரதிபலிக்கின்றன. தமிழக கோயில்களைப் போன்று இங்கு ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திரப் பாராயணம் என்பவை ஒழுங்கு செய்யப்பட்டன.
- மெதிரிகிரிய (மண்டலகிரி) கல்வெட்டு, கந்தளாய் பிரமதேயமும், ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம் பற்றிக் கூறும்.
- கந்தளாயில் அமைந்திருந்த பிராமண குடியிருப்பான இராஜராஜ சதுர்வேதி மங்களம், மகாகிரந்த கமவில் உள்ள ஜெயம் கொண்ட சாலமேக சதுர்வேதி மங்களம் ஆகியன சோழர் ஆட்சியில் சிறப்படைந்தன. வேதாகம கிரியைகளை ஆற்றும் பிராமணர்கள் சிறப்பிடம் பெற்றனர். வேதாகம வல்லுனர்களான பிராமணர்கள் புரோகிதர்களாக போற்றப்பட்டனர்.
- பாடல் பெற்ற தலங்களாகிய திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களில் 9 புதிய கோயில்கள் அமைத்து புனர்நாமத்துடன் இராஜராஜேஸ்வரம் எனப்பெயரிட்டனர்.
- இக்கால இந்துக் கோயில்கள் கட்டிடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக்கலை, கிரியை மரபுகள் என்பற்றில் வளர்ச்சியைக் காட்டின.
- இக்காலத்தில் கடவுள் படிமங்கள், நாயன்மார் படிமங்கள், காரைக்கால் அம்மையார் படிமங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன.
- இவ்வாறாக பொலநறுவைக் காலத்தில் வளர்ச்சியைக் காணமுடிகிறது.

## கலைகள்

**பல்லவர் காலத்தில் கோயிற் கட்டடக்கலை பெற்ற வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விவரிக்க.**

### அ) அரசர்களின் பங்களிப்பு.

- ❖ தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக்காலம் கி.பி 6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர் ஆட்சி.
- ❖ மகேந்திரவர்மன், மாமல்லன், ராஜசிம்மன், நந்திவர்மன் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.
- ❖ சைவ, வைண சமய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியதோடு அவை சார்ந்த கோயிற் கட்டடக்கலை வளம் பெற தம் ஆதரவை பெருமளவு நல்கினர்.
- ❖ தமிழகத்தில் திராவிடக் கட்டடக்கலை வளர அரச ஆதரவு பெரிது உதவியது.
- ❖ பல்லவ மன்னர்களால் மிகுந்த ஈடுபாட்டுடன் அமைக்கப்பட்ட பல்வேறு ஆலயம் அக்காலக் கட்டிடக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.

## ஆ) பல்வகையான கோயிற் கட்டட அமைப்புக்கள்.

நான்கு கட்டடம்

1. மகேந்திரவர்மன் பாணி
2. நரசிம்மன் பாணி
3. இராஜசிம்மன் பாணி
4. நந்திவர்மன் பாணி

மற்றொரு வகையில் குடைதளிகள், மலைதளிகள், கற்றளிகள் எனவும் கட்டடக்கலை வகைப்படுத்தப்படுகிறது.

குடைதளிகள்

❖ ஆரம்பக் கட்டம் குடைவரை.
❖ குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்டது குடைவரை ஆரம்பித்த மன்னன் - மகேந்திரவர்மன்
❖ மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர், வல்லன், பல்லாவரம் போன்ற குடைவரைக் கோயில்கள் இவ்வகைக்குச் சிறந்த சான்றுகள்.
❖ சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர் போன்ற இடங்களிலும் குடவரைகள் உள்ளன.

மலைத்தளிகள் - 2ம் கட்டம்

❖ பாறைகளை கீழிருந்து மேலாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயிலாக மலைதளிகள் உள்ளன.
❖ மாமல்லபுரத்தின் மலைதளி தருமராஜரதம், வீம, நகுல சகாதேவ, திரௌபதி, அர்ச்சுன, வடக்கு பிடாரி, தெற்கு பிடாரி ரதம், வளையான் குட்டை ரதம், கணேச ரதம், என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகிறது.
❖ தர்மராஜ ரதம் சிற்பக்கலைக் களஞ்சியமாக போற்றப்படுகிறது.

கற்றளிகள்

❖ கற்களை சீர்செய்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து காட்டுகின்ற கட்டுமான கட்டடக்கலையே கற்றளியாகும். கற்றளி கலைமாபு – இராஜசிம்ம பல்லவன் கலைமாபு.
❖ உ+ ம் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், பனைமலை கோயில், காஞ்சி வைகுந்தப்பெருமாள்.
❖ இராஜசிம்மன் - காஞ்சிபுர கைலாசநாதர் கோயில் வனப்புடையது.
விமானம், மண்டபம், பரிவாரத்தேவர கோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் ஆகியன குறிப்பிடப்பட்டது.

- ❖ காஞ்சிபுர வைகுந்தப்பெருமாள் கோயில் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு.
- ❖ கலை வேலைப்பாடுகளில் உன்னதமான வளர்ச்சிக்காலம் இராஜசிம்மன் காலம் ஆகும்.

நந்திவர்மன் கட்டடக்கலைப்பிரிவு

- ❖ கி.பி 800 – 900 இடைப்பட்ட கால ஆலயம் அலகிற் சிறிது.
- ❖ உ+ம் - காஞ்சி முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர், திருத்தனி வீரட்டானேஸ்வரர்.

## சோழர் காலக் கட்டடக்கலை

**சோழர் காலக் கட்டடக் கலை வளர்ச்சியினை மேல்வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக?**

அ. சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள்

ஆ. கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சி நிலைகள்

இ. கட்டட அமைப்பில் விமானத்தின் சிறப்பம்சங்கள்

### அ. சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள்

- கி.பி 850 – 1270 வரையான காலம் சோழர் காலமாகும்.
- இந்துசமயம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்ட காலம்.
- மன்னர்கள் சைவ சமயச் சார்புடையவர்களாக விளங்கியிருந்தனர்.- திருநீற்றுச் சோழன், திரிபுவனச் சக்கரவர்த்திகள், சிவபாதசேகரன்.
- சைவசமய சின்னங்களைப் பயன்படுத்தியே ஆட்சியை முன்னெடுத்தனர். (நந்திக் கொடி, நடராஜ சின்னம்)
- தமிழ்நாட்டுகோயில் கட்டடக் கலை வரலாற்றில் சோழப் பேரரசின் காலம் உன்னத வளர்சிக் காலமாக விளங்கியது.
- பல்லவரை அடியொற்றி கட்டடக் கலையை வளர்ச்சியடையச் செய்தனர்.

  விஜயாலய சோழன் - விஜயாலய சோழேச்சரம்

  இராஜராஜசோழன் - தஞ்சைப்பெருங்கோயில்

  இராஜேந்திர சோழன் - கங்கை கொண்ட சோழேச்சரம், பொலநறுவைக் கோயில்கள்.

  குலோத்துங்க சோழன் - ஐராவதேஸ்வரம், திரிபுவனம்.

### ஆ. கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சிக் கட்டங்கள்

- சோழப்பெருமன்னர் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கோயில் கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சி நிலைகளை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குவோம்.

**முற்காலச் சோழர் பாணி – கி.பி 850 – 985**

- விஜயாலயன் தொடக்கம் இராஜராஜன் வரையுள்ள காலம்,
- விஜயாலயன் அமைத்த கோவில்கள் - விஜயாலய சோழேச்சரம், ஆதித்தேஸ்வரம், மூவர் கோவில், ஶ்ரீநிவாசா நல்லூர், கோரங்க நாதர் கோவில்.
- பல்லவர் காலக் கோவில்களைப் போன்று அளவில் சிறியன.
- ஆகம மரபு சார்ந்தவை
- கட்டடக் கலை வனப்புடன் வளர்ச்சி பெற்றது.
- அதிஸ்டானம், அர்த்த மண்டபம், விமானம், தேவகோட்டம் என்பன சிறப்பு பெற்றன.
- பாடல் பெற்ற தலங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.
- விஜயாலய சோழேச்சரம் நான்கு தலங்களைக் கொண்டு விமானம் மேல்நோக்கி சிறுத்த வண்ணம் செல்கின்றது.
- மூவர் கோயில் - இது பிரதான மூன்று கோயில்களைக் கொண்ட கோயிலாகவும் மூன்று கோயில்களுக்கும் பொதுவான ஒரு மகாமண்டபமும் நந்தி மண்டபமும் அமைந்த சிறப்புடையது.

**இடைக்காலச் சோழர் - 985 – 1070**

- இராஜராஜன் காலம் முதல் இராஜேந்திரன் காலம் வரை கட்டப்பட்ட கோயில்கள்
  தஞ்சை பெருவுடையார் கோவில்
  கங்கை கொண்ட சோழேச்சரம்
- தஞ்சை பெருவுடையார் கோயில் இராஜராஜனால் சாளுக்கிய மன்னர்களை வெற்றி கொண்டதன் நினைவாக 7 ஆண்டுகள் செலவழித்துக் கட்டப்பட்டது.
- 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்டது.
- விமானம் 216 அடி உயரமுடையது. 15 அடுக்குகளைக் கொண்டது.
- பிரதான கோவில் கருவரை, அர்த்த மண்டபம், மகாமண்டபம். நந்தி மண்டபம், நர்த்தன மண்டபம், வாச்சிய மண்டபம் ஆகிய ஆறு மண்டபங்களை உடையது.
- ஆகம உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டன.
- 45 அடி நீளமும், 9 அடி அகலமும் கொண்ட கருவறையின் நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன.
- கேரலாந்தகன் வாயில், இராஜராஜன் திருவாயில், திருவணுக்கர் வாயில் என மூன்று வாயில்கள் உள்ளன.
- இராஜேந்திர சோழனால் அமைக்கப்பட்டது கங்கை கொண்ட சோழேச்சரமாகும்.
- 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ளது.

- ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன ஒரே அதிட்டானத்தின் மேல் அமைந்துள்ளது.
- இவ்வாலயத்தின் பிரதான பகுதிகளாக அமைவது விமானமாகும். அவ்விமானம் வில் வளைவில் அமைந்துள்ளது.

**பிற்காலச் சோழர் பாணி – கி.பி 1070 – 1270 வரை**

- 1 ஆம் குலோத்துங்கன் தொடக்கம் 3ஆம் இராஜேந்திரன் வரை
- இக்காலக் கோயில்கள் சோழர்காலக் கட்டடக்கலையின் முதிர்ச்சியைக் காட்டுவன.
- 1 ஆம் குலோத்துங்கன், 2 ஆம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்ற அரசர்களால் அமைக்கப்பட்ட கோயில்களாகும்.
- சிதம்பரம், திரிபுவனேஸ்வரம், ஐராவதேஸ்வரம் போன்றவை இக்காலப் பாணியைப் பிரதிபலிக்கின்றன.
- இடைக்காலக் கோயில்களின் விமானங்கள் உயரமாக அமைய பிற்கால சோழர் கோயில்களின் கோபுரங்கள் உயரமாக அமைந்தன. உதாரணமாக சிதம்பரத்தின் 7 வாயில்களிலும் 7 உயரமான கோபுரங்கள் உள்ளன.

## இ. கட்டட அமைப்பில் விமானத்தின் சிறப்பம்சங்கள்

- விமான அமைப்பின் உன்னத வளர்ச்சிக் காலம்.
- விமானம் ஏகதாளம், துவிதாளம் முதலாக 15 தளவரிசை முறை கொண்டிருந்தது.
- விமானங்கள் மிக உயரமாக அமைந்தன.
- தஞ்சை பெருவுடையார் ஆலய விமானம் திராவிடக் கலையின் நிறைவான வளர்ச்சிக்கு சான்றாகும். இதன் உயரம் 216 அடி 15 தளம்
- இக்கோயிலின் விமானத்தை முழுமையான கருங்கற் சிற்பங்கள் அழகுபடுத்துகின்றன. கோயில் தென்திசை மேரு, பெரிய கோவில், பெருவுடையார் ஆலயம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது.
- கங்கை கொண்ட சோழேச்சரத்தின் விமானம் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும்.
- சிற்ப அலங்காரம், சித்திர வேலைப்பாடுகளைக் கொண்டதாகும்.
- அனைவரையும் கவரும் தன்மையுடையது.
- புராணக் கதைகளை சித்திரிக்கும் சிற்பங்கள் விமானத்தை அலங்கரிக்கின்றன.

**1. “இந்து விக்கிரக கலையின் பெருமையை உலகறியச் செய்தது நடராஜ வடிவமே” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.**

**அ) நடராஜ வடிவத்தின் தோற்றப்பொலிவு.**

- ❖ இந்து விக்கிரகக் கலையின் பெருமையை உலகறிய செய்வதற்கேற்ப சிறப்பு நடராச வடிவத்தில் விளங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன.
- ❖ இவ்வடிவத்தின் தோற்றம் சிற்ப சாஸ்திரங்கள் கூறும் அளவு பிரமாணங்களின்படி அமைக்கப்படுவதால் கலையெழில் மிக்க நடனக் கோலத்துடன் விளங்குவது.
- ❖ சமயத் தத்துவச் சிறப்பு மிக்கது.
- ❖ ஊன்றிய திருவடி (வலது) தூக்கிய திருவடி (இடது) வீசுகரம் (இடது) அபயகரம் மற்றும் உடுக்கை அக்கினி ஆகிய பொருட்கள் திருக்கரங்களில் விளங்கும்.
- ❖ சடாமுடி – கங்கை, பிறை, அரவாபரணம், புலியாடை ஆகியவற்றுடன் கூடியது நடராச வடிவம்.

**ஆ) அவ்வடிவம் கொண்டு விளங்கும் தன்மை.**

- ➢ ஐந்தொழில் தத்துவம்
    - ❖ படைத்தல் - உடுக்கை ஏந்திய கரம்.
    - ❖ காத்தல் - அபய கரம்.
    - ❖ அழித்தல் - அக்கினியுடன் கூடிய கரம்.
    - ❖ மறைத்தல் - ஊன்றிய திருவடி.
    - ❖ அருளல் - தூக்கிய திருவடி
- ➢ “தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
  சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
  ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
  நான்ற மலர்ப்பதத்தே நாடு” – (உண்மை விளக்கம்.)
- ➢ நடராஜ வடிவம் பஞ்சாட்சரமாகிய நமசிவாய என்பதனையும் தத்துவப்பொருளாகக் கொண்டு விளங்குவது.
    - ❖ ந – திருவடி
    - ❖ ம – திருவயிறு
    - ❖ சி – திருத்தோள்
    - ❖ வா – திருமுகம்
    - ❖ ய - திருமுடி

- மற்றும் உலக இயக்கத்தினையும் இவ்வடிவம் பிரதிபலிப்பது தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற நூல்களில் நடராசர் போற்றப்படுகின்றார்.
- தற்காலத்தில் பௌதீக ஞான விவாதங்களில் உலகின் தோற்றத்தின் மிக ஆதியான வடிவமாக இதைக் கொள்வார்கள்.

### இ) சிவானந்த நடனம் பற்றிய கலா விமர்சகரின் கருத்துக்கள்.

- நடராஜ விக்கிரகத்தின் கலையெழிலை விமர்சகர்கள் சிறப்பாக வியந்து பாராட்டி உள்ளனர். கலாயோகி ஆனந்த குமாரசாமி இவ்வடிவத்தின் சிறந்த கலையம்சங்களை தமது சிவானந்த நடனம் என்ற நூலில் போற்றுகின்றார்.
- சுவாமி விபுலானந்தர் சி.சிவராமமூர்த்தி, கமில் சுவலபில்சிம்மர், பௌச்சர் போன்ற அறிஞர்களும் இவ்வடிவத்தின் சிறப்புக்களை விதந்து போற்றியுள்ளனர். ஆடல் வல்லான் எனவும் தில்லைக்கூத்தன் எனவும் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

## உபநிடதம்

### இந்து தத்துவ சிந்தனையின் கருவூலம் உபநிடதம் இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க?

1. உபநிடதம் பொருள் விளக்கம்
2. உபநிடத காலமும் அமைப்பும்
3. உபநிடதம் கூறும் பிரம்மம்
4. உபநிடதம் கூறும் ஆன்மா
5. பிற்கால தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்களிப்பு
6. உபநிடத மகாவாக்கியங்கள்

1. உபநிடதம் என்பது உப + நி + சத் எனப் பிரிக்கப்பட்டு குருவுக்கு மிக அண்மையில் இருந்து அவர் கூறுகின்ற உண்மைகளை சிரத்தையுடன் கற்றல் எனப்பொருள்படும். அதாவது பிரமஞானத்தை உணர்த்தும் ஓர் ஆசிரியரின் அடியில் நெருங்கியிருந்து அம்மறைபொருளை சிரத்தையுடன் கேட்டல் எனப்பொருள்படும்.
2. கி.மு 10 ஆம் நூற்றாண்டு – கி.மு 6
   மகாவீரருக்கும் புத்தருக்கும் முற்பட்டது.
   வேதத்தின் இறுதிப்பகுதியாகிய ஞானகாண்ட பகுதியில் எழுந்தது.
   வேதங்களில் அடங்கியுள்ள தத்துவ சிந்தனை மரபுகளை முழுவடிவில் தெளிவுபடுத்தி பிரதிபலிப்பது.

தத்துவ தரிசனங்களுக்கு பிரமாணமாக கொள்ளப்படுவது.

3. பிரம்மம் என்ற சொல் 'பிரட்' என்ற வினையடியாக தோற்றம் பெற்றது.

- பிரம்மம் உண்மையானது, சத்தியமானது.
- பிரம்மம் சர்வ வியாபகமானது.
    - உப்பு நீரும்
    - சுடுநீரும்
- ஒருவன் பிரமத்தைப் பிரித்தறிந்து காண விளைவதானது முயன்றும் முடியாத செயல்.
    - வண்டி தனது சக்கரத்தை தானே உருட்ட முயற்சித்தல்.
    - ஒருவன் தானே தன் தோளில் ஏறி அமர்தல்.
- கல்லா, மரமா, மண்ணா? எது பிரம்மம்? எனக் கேட்டல். நேதி, நேதி எனக் கூறப்பட்டு பிரம்மம் உலகப் பொருட்களுக்கு அப்பாட்பட்டது. என விளக்கப்பட்டது.
- உலகத் தோற்றத்திற்கு பிரம்மம் காரணம். உதாரணம் :- நுண்ணிய ஆலம் வித்து
- உலகத் தொழிற்பாட்டிற்கும் பிரம்மம்தான் காரணம்.
- நீருக்கு குளிர் என்ற இயல்பைக் கொடுத்து, நெருப்பிற்கு சூடு என்ற இயல்பைக் கொடுத்து காற்றுக்கு அதன் தன்மையைக் கொடுத்து உலகத் தொழிற்பாட்டுக் காரணியாக பிரம்மம் விளங்குகிறது.
- உலகத்தோடு தொடர்புபட்ட நிலையில் பிரமத்திற்கு இரு நிலைகள் காணப்படுகின்றன.
    - சப்பிரபஞ்ச நிலை
    - நிஷ்பிரபஞ்ச நிலை
- ஆன்மாவின் தோற்றத்திற்கும் பிரம்மம் காரணம்.
  உதாரணம்:- ஒரு நெருப்புக் கட்டையிலிருந்து பல தீப்பொறிகள் உற்பத்தியாவது போல அழிவற்ற பிரமத்திலிருந்த சகல ஜீவராசிகளும் உற்பத்தியாகின்றன.
- ஆன்மாக்களின் செயற்பாட்டுக்கு பிரம்மமே காரணம்.
  உதாரணம்:- காண்பது கண்ணல்ல
  கேட்பது காதல்ல
  பேசுவது நாக்கல்ல
  ஐம்புல செயற்பாட்டுக்கு காரணமாய் அமைவது பிரம்மம்.

3. ஆன்மா வேறு உடல் வேறு, வண்டியில் கட்டிய குதிரை போல் விளக்கப்பட்டுள்ளது.

- ஆன்மா ஜீவாத்மா எனவும் அழைக்கப்படும்
- ஆன்மா பிரமம் பற்றி அறிவது பரவித்யா என்றும், உலக நிகழ்வுகள் பற்றி அறிவது அபரவித்யா எனவும் அழைக்கப்படும்.
- ஆன்மா பஞ்ச கோசங்களால் போர்க்கப்பட்டுள்ளது. (உ+ம். அன்னமயகோசம்)

- ஆன்மாக்கள் தாம் செய்த வினையின் பிரகாரம் பல்வேறு பிறவிகளைப் பெறுகின்றன. (உ+ம். நெற்கதிர் முற்றி உதிர்ந்து மீண்டும் முளைப்பது போல ………………….)
- பாவவினைகளுக்கும் இறப்பிற்கும் உபநிடத ரிஷிகள் பயந்தார்கள் என்பது ‘‘என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்க’’ எனக்கூறப்படுகின்றது.

4. உபநிடதம் கூறுகின்ற பிரம்மம், ஆன்மா, பிரபஞ்சம், கன்மம் மறுபிறப்பு, முத்தி பற்றிய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத் தத்துவங்கள் தோற்றம் பெற்றன.
    - பிரம்ம சூத்திரம்
    - பகவத்கீதை
    - அறுவகை தரிசனங்கள்
    - வேதாந்தக் கோட்பாடு
    - சைவசித்தாந்த கோட்பாடு
    - வைதீக, அவைதீக மதங்கள்

- வெவ்வேறு நிலைகளில் தத்துவ விளக்கம் அளித்தவர்களும் உபநிடதத்தை மூலமாக கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

5. தத்துவம் அஸி – அது நீ ஆகிறாய்

   அகம் பிரமாஸ்மி – நானே அது

   சோகம் அஸ்மி – அதுவே நான்

   அஜன்பிரமம் - ஆன்மாவே பிரமம்

   பிரமம் அஜன் - பிரமமே ஆன்மா

## சைவசித்தாந்தம்

**சைவசித்தாந்தம் கூறும் இறை கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக?**

### 1. இறைவனின் உண்மைத் தன்மை

- சைவசித்தாந்தம் பதி என்ற நிலையில் இறைவன் உண்மைப் பொருள் என்பதை நிறுவுகிறது.
- பதி உண்மையை நிறுவுவதற்கு ஆகமப் பிரமாணத்தையும், அனுமானப் பிரமாணத்தையும் மூலமாகக் கொள்கிறது.
- பதியின் உண்மைத் தன்மை இரு உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

  உலகின் உற்பத்தி – பானை

  உலகின் தொழிற்பாடு – குடை

- குறைவான ஒரு பொருள் உண்டு எனின் நிறைவான ஒரு பொருளும் உண்டு. இதை நாம் ஏற்றுக் கொண்டால் அழியக் கூடிய உலகம் உண்டு எனின் அழியமுடியாத இறைவனும் உண்டு என பதி உண்மைப் படுத்தப்படுகிறது.
- ஆன்மா வினைப்பயனை அனுபவிப்பதன் ஊடாக தமது இலட்சியமாகிய ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்கின்றன. இதனை ஏற்றுக்கொள்வோமானால் ஆன்மா வினைப்பயனை அனுபவிக்கச் செய்ய ஒருவர் இன்றியமையாதவர் அது எதுவோ அதுவே பதி என உண்மைப் படுத்தப்படுகிறது.
- அவன் அவள் அது எனும் பொருட்களது தோற்றம், ஒடுக்கம், நிலைபேறு, வளர்ச்சி என்பவற்றில் ஏதோவொரு ஒழுங்குண்டு. இதனை நாம் ஏற்றுக்கொள்வோம் எனின் அந்த ஒழுங்கை நடாத்த ஒரு கருத்தா அவசியம். அதுவே பதி என உண்மைப்படுத்தப் படுகிறது. இதனை திருவருட்பயன் ( "அவன் அவள் அது எனும்.............." )

## 2. பதியின் இயல்புகள்

- பதி நித்தியமானது, வேகமானது, எங்கும் நிறைந்தது, ஆதியும் அந்தமும் அற்றது, அறிவிக்காமலே எதையும் அறிந்து கொள்ளும் இயல்புடையது.
- சித்தாந்தம் காட்டும் பதி மேலான பொருள். இப்பதி ஒருநாமம், ஓருருவம் இல்லாதது. அனைத்தையும் கடந்தது. அனைவருக்கும் எட்டாதவன். வியாபகத் தன்மை உடையது. அதாவது "அ" என்னும் அகரம் அனைத்து எழுத்திற்கும் அடிப்படையாக அமைவது போல பதியும் சர்வ வியாபகம் உடையவன். இதனை திருவருட்பயன் "அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" எனக்குறிப்பிடுகிறது. அவ்வாறே சுடுநீரில் சூட்டின் தன்மை போல் இறைவன் உலகில் வியாபித்துள்ளான். என்பதை திருவருட்பயன் " எங்கும் எவையும் எரியுறு நீர் போல் ஏகம் தங்குமவன் தானே தனி" எனக்குறிப்பிடப்படுகிறது.
- இறைவன் திருவருட் சக்தியினால் சக்தியிலிருந்து விலகாத தன்மை
  "தன்னிலைமை மன்னுயிர்கள் சாராத்தரும் சக்தி
  பின்னமிலான் எங்கள் பிரான்" என்ற பாடலில் விளக்கப்பட்டுள்ளது.
- சித்தாந்தம் காட்டும் பதி ஒன்றாகவும் இரண்டாகவும் பலவாகவும் ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் சிறியனவற்றுக்கெல்லாம் சிறியனவாகவும் பெரியனவற்றுக்கெல்லாம் பெரியனவாகவும் விளங்கும் இயல்பை திருவருட்பயன் "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரறுக்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்" என்ற பாடல் ஊடாக வெளிப்படுத்துகின்றது.
- சைவம் பதிக்கு இரு இலக்கணங்களை வழங்குகின்றது.
  1. சொரூப இலக்கணம்,
  2. தடத்த இலக்கணம்

சொரூபநிலையில் உள்ள பதி ஊரிலன் பேரிலன் குணமிலன் குறியிலன் இவ்வண்ணத்தான் இத்திறத்தான் என எவறாலும் சொல்ல முடியாது. கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டது. இந்நிலையை விளக்குவதற்கு மாணிக்கவாசகர் “விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்” என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

- பதி ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் அருள்புரியும் பொருட்டு தன்னிலையிலிருந்து கீழிறங்கி வரும் நிலை தடத்த நிலையில் இறைவனுக்கு உருவம், நாமம், குணம், குறி என்பன காணப்படும். தடத்த நிலை பற்றி கூறவந்த சிவஞானசித்தியார் “அருள்தரு சிவனே எல்லாம் அறிந்தறிவித்து நிற்பவன்” எனக்கூறுகிறது. அதாவது இறைவன் தானே அறிகின்ற குணமும் ஆன்மாவிற்கு அறிவித்து அருள்கின்ற குணமும் உள்ளவன் என்பதைக் காட்டுகின்றது.
- இறைவனின் இயல்பு ஞானமும் ஆனந்தமும் ஆகும். இதனை “சத்சித்ஆனந்தம்” என்பர். இம்மூன்றினுள்ளும் இறைவனின் எண்குணம் அடங்குகிறது.
- என்றும் உள்ள எக்காலத்தும் ஒரே தன்மையுடைய பொருள் சத் - தன்வயத்தனாதல் இதனுள் அடங்கும்.
- சித்தில் தூயஉடம்பினராதல், முற்றும்உணர்தல், இயற்கைஉணர்வினராதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, எனும் ஆறு குணங்களும் அடங்கும்.
- ஆனந்தம் - வரம்பில் இன்பமுடைமை அடங்கும்.
- தடத்த நிலையில் உள்ள இறைவன் ஐந்தொழில்களை ஆற்றுகிறார்.
- பதி ஆன்மாவின் பக்தி நிலைக்கு ஏற்ப மூவகை திருமேனிகளை வெளிப்படுத்தி நிற்கிறது. அருவம் - சிவம், சக்தி, நாதம், விந்து. உருவம் - பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன். அருவுருவம் - சதாசிவம். இதனை திருவருட்பயன் “அருவும் உருவும் அறிஞற்கு அறிவாம் உருவும் உடையான் உளன்” எனக்கூறுகிறது.
- உருவத்திருமேனியில் உள்ள இறைவன் மேலும் மூன்று வடிவங்களில் விளங்குகிறார். போக வடிவம், யோக வடிவம், கோர வடிவம் என்பவையாகும்.
- இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன் தன்னை நம்பி வழிபடும் அடியவருக்கு அருள்பாலிக்கும் இயல்புடையவன். என்பதை திருவருட்பயன் “நலமிலன் நன்னார்க்கு நன்னினார்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன்” எனக்கூறுகிறது.

## 3. இறைவனும் ஆன்மாவும்

- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் ஆன்மாவும் உள்பொருளாகும்.
- சதசத்து எனப்படுவது பசு
- பசு கடவுளைப் போல் அநாதியானது

- சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் உடனாய் வேறாய் நிற்பான்.
- ஆன்மா ஈடேற்றம் பெறுவதற்காக இறைவன் தடத்த நிலையில் ஐந்தொழில்களை ஆற்றுகின்றான்.
- படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆன்மாவிற்குரிய பக்குவ நிலையை ஏற்படுத்தி அவற்றில் மலபாசத்தை ஒழிக்க வீடுபேறு எனும் முத்தியை அருளுவார்.
- முத்தியை அருளுவது அனுக்கிரகம். ஆன்மாவிற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகள் கைகூட இறைவன் குருவடிவாக வந்து உதவுவார்.
- இருவினையொப்பு, மலபரிபாகம், சதிகுறிபாதம் (விளக்கம்) என்ற படிநிலையில் ஆன்மா முத்தி நிலைக்கு செல்கிறது.
- அகப்பூசை, புறப்பூசை, திருக்கோவில் வழிபாடு, ஆலயசேவை, அடியார் வழிபாடு ஆகியவற்றால் இறைவனோடு ஆன்மா தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. முத்தி நிலையில் ஆன்மா தாள் + தலை என்னும் சொல் தாடலை எனப் புணர்வது போல ஆன்மா மீது இறைவனின் திருவருட் சக்தி படிகிறது. அதாவது ஆன்மா அப்பதியுடன் கலந்து பிறவியற்ற பேரானந்த நிலையாகிய முத்தி நிலையை அடைகிறது. இதுவே சுத்தாத்வைத முத்தி ஆகும். இங்கு ஆன்மா சிவத்தோடு கலந்தாலும் சிவமாவதில்லை. என்பதைக் குறிக்கிறது.

## 1. சைவ சித்தாந்தத்தில் உலகப்படைப்பு பற்றிய சிந்தனைகள் விளக்கம் பெறுமாற்றை மேல்வரும் தலைப்புகளில் தெளிவுப்படுத்துக

I உலகம் படைக்கப்படும் விதம்.

II உலகப்படைப்பின் நோக்கம்

III இறைவனும் மாயையும்

I.

✦ சைவசித்தாந்தத்தில் இறைவனே உலகைப்படைத்ததாக கொள்ளப்படுகிறது.

✦ உலக உற்பத்திற்கு இறைவன் நிமிர்த்த காரணமாகவும், சக்தி துணைக்காரணமாகவும் கொள்ளப்படுகிறது.

✦ கருதல் என்ற பிரமாணத்திற்கு உதாரணமாக பானையைக் கொண்டு உருவாக்கியவன் உளன் என்று நிறுவுவது போன்று உலகைக் கொண்டு அதைப் படைத்த இறைவன் உண்மை என்று நிறுவப்படும்.

II.

✦ ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுத்து நல்வினை தீவினைகளை அனுபவிக்கச் செய்ய உலகம் தேவை என சைவ சித்தாந்தம் கூறும்.

- ✦ கடவுளின் இருப்புக் கொள்கையை விளக்க உலகப்படைப்பு பற்றி சைவசித்தாந்தம் கூறுகின்றது.
- ✦ மூவகைப் பிரமாண விளக்கம் ( பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் )

## III. இறைவன் பற்றிய விளக்கம்

- ✦ மாயை பற்றிய விளக்கம்.

  இறைவன் அறிவுள்ளவன், உள் பொருள்

  சித்து மாயை அறிவற்றது. அசத்து, சடப்பொருள், உள்பொருள்.
- ✦ மாயையில் இருந்து உலகம் தோன்றுதல் என்னும் கொள்கை. மாயை உலக உற்பத்திற்கு முதல் காரணம்.
- ✦ மெய்கண்ட சாஸ்திரங்களில் இருந்து ஆதாரம் காட்டி விளக்குதல்.

  "விடிவாம் அளவும் விளக்கனைய மாயை………………"

- ✦ மூவகை ஆன்மாக்கள்
- ✦ 24 தத்துவங்களுள் உலகப்படைப்புக்கு பிரகிருதி மாயை மூலமானது.

  இறைவன் உலகைப் படைப்பார். ஆன்மா போகங்களை அனுபவிக்க படைப்பு நிகழ்கின்றது.

  ஐம்பூதங்கள் மூலம் இறைவன் நிமிர்த்த காரணமாக விளங்குகின்றான்.

**கன்மம்**

## சைவ சித்தாந்தம் குறிப்பிடும் கன்மக் கோட்பாட்டினை விளக்கி அதில் இருந்து விடுதலை பெறக்கூடிய வழிவகைகளை ஆராய்க?.

- ❖ சித்தாந்த அறிமுகம்.
- ❖ கன்மம் பற்றிய அறிமுகம்.
- ❖ கன்மத்தில் இருந்து விடுதலை பெறும் வழிகள்.
- ❖ பதியுடன் சேர்தல்.

  இருவினையொப்பு, மலபரிபாகம், சத்நிபாதம்